[1972 மார்ச் 17

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது கிட்டத்தட்ட 129 உயர்நிலைப்பள்ளிகளை நகராட்சிகள் நடத்திவருகின்றன. நகராட்சிகளுக்கு இருக்கின்ற நிதிப் பற்றுக்குறை காரணமாக, அந்தப் பள்ளிகளை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டுமென்று நகராட்சிகள் கோரியுள்ளன. அந்தக் கோரிக்கையை அரசு இப்போது ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால் உடனடியாக எல்லாப் பள்ளிகளையும் ஏற்று நடத்த அரசுக்கு நிதி போதாமையால், மிகவும் மோசமான நிலையிலிருக்கும் 25 பள்ளிகளை எடுத்துக் கொள்வதென்றும், அதில் 10 பள்ளிகளை உடனடியாக எடுத்துக் கொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த 10 பள்ளிகளில் மேட்டுப்பாளையம் நகராட்சியிலுள்ள இரண்டு பள்ளிகளும் அடங்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி எண் 526.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : This is a question concerning my constituency. Only one question, please.

MR. DEPUTY SPEAKER : You can put it in a personal way. அதற்கு ஒரு தனிக் கேள்வி போடலாமே.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : தலைவரவர்களே, பல நகராட்சிப் பள்ளிகளை அரசாங்கம் எடுத்து நடத்தப்போவதாகச் சொன்னார்கள். நிதிநிலை காரணமாக அருப்புக்கோட்டை நகராட்சி உயர்நிலைப் பள்ளியை நடத்த முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த பள்ளியையும் அரசாங்கம் உடனடியாக ஏற்று நடத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது மிகமிக நெருக்கடியான நிலையில் இருக்கக்கூடிய 25 பள்ளிகளை அரசாங்கம் ஏற்று நடத்துவதாக இருக்கிறது. அந்த 25 பள்ளிகளும் மேட்டுப்பாளையம், இராசிபுரம், திருவண்ணாமலை, திருப்பூர், கோபிச்செட்டி பாளையம், வாலாஜாப் பேட்டை, பழனி, காரைக்குடி, குடியாத்தம், விருதுநகர், உடுமலைப்பேட்டை, இராமநாதபுரம், திருப்பத்தூர், காஞ்சிபுரம், தூத்துக்குடி, சிங்காரநல்லூர், திருவள்ளூர், சேலம் ஆகிய நகராட்சிகளைச் சேர்ந்தவை. அருப்புக்கோட்டை நகராட்சி இதில் சேரவில்லை. ஆகையால் அந்த நகராட்சி இந்த நகராட்சிகளை விட அதிக நிதி வசதி உடையதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

திருத்தணிப் பகுதியிலுள்ள தெலுங்கு ஆசிரியர்கள்

*526. வினா. திரு. இ. எஸ். தியாகராசன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இரு மொழிப் பிரதேசமான திருத்தணிப் பகுதியில் தெலுங்கு மொழி படித்த ஆசிரியர்களுக்கு வேலை கிடைக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

1972 மார்ச் 17]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மொழிச் சிறுபான்மை யினருக்கு இரு மொழிப் பிரதேசமான திருத்தணியில் தெலுங்கு மொழி பயிலுவதற்கு வேண்டிய வசதிகள் செய்து தருவது அரசின் பொறுப்பு ஆகும். ஆனால் தெலுங்கு மொழி பயின்ற ஆசிரியர்கள் எல்லோருக்கும் வேலை தேடித் தருவது அரசின் சக்திக்கப்பாற்பட்டது.

திரு. இ. எஸ். தியாகராசன் : இன்னும் பல தெலுங்குபடித்த ஆசிரியர்கள் வேலை கிடைக்காமல் தவிக்கிறார்கள். அவர்களை எல்லாம் அப்பரென்டிஸ் என்கிற முறையில் வேலைக்கு நியமித்துக் கொள்ள ஆவன செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : திருத்தணியில் 17 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அவற்றைத் தவிர துவக்கப் பள்ளிகளும் இருக் கின்றன. அங்கெல்லாம் தெலுங்கு பயிற்சி பெற்றவர்களையே தான் நியமிக் கின்றார்கள். இன்னும் எங்கெங்கே வாய்ப்பு ஏற்படுகிறதோ அங்கெல்லாம் தெலுங்கு பயிற்சி பெற்றவர்களை நியமிக்கலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the Telugu Teachers have many real grievances and I have also represented them to the Hon. Minister for Education and he has also been kind and sympathetic in considering them. May I know from the Hon. Minister whether he will consider the appointment of a Special Officer to go into the needs and difficulties of these teachers and recommend to Government remedial measures?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவர்களுடைய பிரச்சினை களைப்பற்றிய கோரிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனை யில் இருக்கிறது. விரைவில் தக்கமுடிவு எடுக்கப்படும்.

Professors of Tamil

* 527 *Q.*—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether Professors of Tamil have been appointed in all upgraded Government Colleges where the posts of Professors of English exist?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எல்லாக் கல்லூரிகளிலும் தமிழ்த்துறையில் உதவிப் பேராசிரியர்கள் பணியாற்றுகிறார்கள். தமிழைப் பி. ஏ. வகுப்பில் சிறப்புப் பாடமாக பயிற்றுவிக்கும் கல்லூரிகளிலும், நான்கு உதவிப் பேராசிரியர்களுக்கு மேல் பணியாற்றும் கல்லூரிகளிலும் மட்டுமே பேராசிரியர்கள் நியமிக்க வேண்டுமென்பது பல்கலைக் கழகத்தின் விதிமுறை. இந்த விதி முறைக்குட்பட்ட எல்லா கல்லூரிகளிலும் தமிழ்ப் பேராசிரியர்கள்